81

UNIVERSITY OF JAFFNA LIBRARY

விலை சதம்: -/25

# காந்தீயம்

**கிராம சேவை**

*வயது வந்த மாணவர்கள் அதாவது கல்லூரி மாணவர்கள் அனைவரும் படித்துக் கொண்டிருக்கும்போதே கிராம சேவையைத் தொடங்க வேண்டும்.*

—மகாத்மா காந்தி


மலர் 16 | காந்தி நிலையம்—உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 109) 1978 ஒக்ரோபர் | இதழ் 1

## இலட்சியவாதி காந்தி

நீங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? இது காந்தியடிகளிடம் அமெரிக்க நிருபர் கேட்ட கேள்வி. பளிச்சென்று வந்தது பதில், ''யார் கண்ணீர் வடித்தாலும் அதைத் துடைப்பது என் வேலை'' என்று. எவ்வளவு பெரிய இலட்சியம் இது. 'யார்' என் பதில் உலகமே அடங்கிவிட்டது. துன்பப்படுவோன் கறுப்பனா — வெள்ளையனா, படித்தவனா—பாமரனா, ஏழையா — பணக்காரனா, ஆணா — பெண்ணா, இந்துவா — முஸ்லீமா, உயர்ந்தவனா—தாழ்ந்தவனா என்ற பேதா பேதமின்றி அவர் ஓடோடி வந்து உய்விப்பார். இத்தகைய உயரிய இலக்கை ஏற்றுக் கொண்ட அவர் தன்னை அதற்குத் தக்கவாறு ஆக்கிக் கொண்டது வியப்பல்லவே!

### பிரார்த்தனைமயம்

''என்னை யாராவது துப்பாக்கியால் சுட்டால், அவன் மீது சிறிதும் காழ்ப்புணர்ச்சி, கோபமின்றி கடவுள் பெயரை என் உதடுகள் உச்சரித்த வண்ணம் நான் இறப்பேனானல், என்னைக் கடவுள் மனிதன் என்று உலகிற்கு பறைசாற்று'' என்று தனது சீடனிடம் 29-01-1948 இரவில் கூறினவர் காந்தி. இறைவனிடம் தன்னையே ஒப்புக் கொடுத்த அவர் அவனை தவருது காலை, மாலையில் பிரார்த்தனை செய்தது நியாயமே. அவர் தனது இறைவழிபாட்டிற்குத் தேர்ந்தெடுத்த ஈசாவாஷ்ய உபநிடதச் சுலோகம் அவரது குறிக்கோளை எத்துணை நுணுக்கமாக எடுந்துக் காட்டுகிறது? 'ஆண்டவன் அவனது அனைத்துப் படைப்பிலும் வியாபித்துள்ளான். நாமெல்லாரும் அவனது குழந்தைகள். அதனால் நமக்குள் வேறுபாடு எவ்வாறு இருக்க முடியும்? சாதியாலோ, சமயத்தாலோ, இனத்தாலோ, வேறு எக்காரணத்தாலோ நமக்குள் வித்தியாசம் இருப்பதற்கில்லை என்றல்லவா அதன் முதல் வரி நமக்கு எடுத்தியம்புகிறது. தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்தில் அவர் அக்கறை காட்டியதற்கு இச்சுலோகம் ஓர் அழகிய எடுத்துக்காட்டாகிறது.



### பிரமச்சரியம்

சேவைக்குத் தன்னை அர்ப்பணித்தார் காந்தி. ஆனல் குடும்ப பாசம் இதற்குத் தடையாயிருந்ததை ஜூலு கலகத்தின் போது உணர்ந்தார். கஸ்தூரிபாயுடன் கலந்து ஆலோசித்தார். அவருடைய பூரண சம்மதத்தின் பேரில் 1905 ஆம் ஆண்டிலிருந்து, தனது 37 ஆவது வயது முதல் பிரம்மச்சாரியானர். இதனல் பொது நலக் காரியங்களில் தங்குதடையின்றி, விருப்பு வெறுப்பின்றி உழைக்க அவருக்கு வாய்ப்பு பெருகியது.

### ஆபிரிக்கச் சூழல்

தென் ஆபிரிக்க இந்தியர்களின் அவல நிலை இந்தியாவிற்குத் திரும்பிக் கொண்டிருந்த இளைஞன் காந்தியைத் தடுத்து நிறுத்திற்று. பிரச்சனையை ஊடுருவிப் பார்த்தார். முதலில் அவர்களைத் தட்டி எழுப்பினர். நேடால் இந்திய காங்கிரஸ் உதயமாயிற்று. இந்தியன் 'ஒபீனியன்' என்ற வார இதழ் உருவாயிற்று. பணம் வசூலாயிற்று. பொதுப் பணத்தைக் கையாளும் முறை தெரிய வந்தது. சாத்விக எதிர்ப்பு தலையெடுத்தது. இது சத்தியாக்கிரகமாக வளர்ந்தது. மக்களிடையே தியாக உணர்வு பரிமளித்தது. பயம் பறந்து போயிற்று. சிறை மாமியார் வீடாயிற்று. பயிற்சிக் களமாக டால்ஸ்டாய் பண்ணை பிறந்தது. சுய கட்டுப்பாடும் தன்னலத் தியாகமும் துன்புறுத்துவோனிடம் சமயம் கிடைக்கும் போதெல்லாம் பேசித் தீர்த்தலும் அவன் மனதை மாற்றிற்று. இவ்வாறு அன்பு வழி, ஆன்மீக நெறி உலகிற்கு கிட்டியது.

### அரசியல்வானில்

தகிடுதத்தம் மலிந்த, அயோக்கியனின் இறுதிக்கட்டமெனப்பெறும் அரசியலில் கடவுள் நம்பிக்கை கொண்ட காந்தி ஏன் ஈடுபட்டார்? இதற்கும் அவரது அத்தியந்த இலட்சியமே காரணம். தான் நினைத்த சர்வோதய நற்சமுதாயத்தை அமைக்க முதலில் மக்கள் சுயராஜ்யம் அடைய வேண்டும். இதற்குத் தடையாயிருந்தது பிரிட்டிஷ் ஆட்சி

(3ஆம் பக்கம் பார்க்க)

★ காந்தி ஜயந்தி விழாச் சிறப்பிதழ் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்

உருத்திரபுரம். [இலங்கை]

தொலைபேசி: 254

(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 109

1978 ஒக்ரோபர்


## அறவாழ்வுக் கழகம்

மகாத்மா காந்தியின் பேச்சு, எழுத்துக்களை விட அவர் வாழ்க்கையே அவர் தத்துவத்தை நன்கு விளக்கும் என்று ஆசாரிய கிருபாலினி அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். இதிலிருந்து ஓர் உண்மை நமக்குப் புலப்படும். மகாத்மா தம் தத்துவங்களை வாயால் சொல்லுவதை விட்டு வாழ்முறையால் எடுத்துக் காட்டினார் என்பதாகும். இதனால்தான் அவர் தம் சுயசரிதையை ''சத்தியம் பற்றிய பரிசோதனைகள்'' என்று சொன்னார்.

மகாத்மாவோடு இயைந்த அடிப்படைத் தத்துவங்கள் உண்மை, அகிம்சை என்பனவாகும். இவற்றைச் சமூகத்தோடு சார்த்திக் கையாளும்போது அவை சத்தியாக்கிரகம், அறவாழ்வு, அதாவது நம்பிக்கைச்சொத்துமுறை என்ற வாழ்வு முறைகள் தோன்றுகின்றன. இவற்றுள் நம்பிக்கைச் சொத்து முறையே மனித சமுதாயத்திற்கு மிக இன்றியமையாத ஒரு சமூக ஒழுக்கமாமாகும். இதன் முழுப்பயனையும் பண்பையும் நாம் அறிந்து கொள்ளல் அவசியம்.

பொருளாதார விஷயத்தில் சமூகம் இரண்டு வகையில் ஒழுகும். மனிதர் குணத்தின் இயல்பால் மூன்று வகைப் படுவர். இராசதம், தாமதம், சத்துவம் என்பன இம்மூன்று குண வகைகள். ஒவ்வொருவரும் தம்தம் இயல்பிற் கேற்றவாறு செயல்படுவர். தாமதமுள்ளோர் பிறர் சொல்வதைக் கேட்டு ஒழுகுவார். இராசத குணம் உள்ளோர் வலிந்து தாமே செயலில் இறங்கி வினை புரிவர். சத்துவகுணமுடையோர் நல்லதையே சிந்தித்து எல்லோர்க்கும் நலம் புரியும் செயலில் ஈடுபடுவர். சமூகம் இவ்வாறு பலதிறப்பட்ட மக்களைக் கொண்டது. இந்தப் பிரிவு சாதிப்பிரிவு அன்று. ஒவ்வொரு மனிதனிலும் மூன்று குணங்களும் உண்டு. படிப்படியாக ஒவ்வொருவரும் சத்துவகுணத்தை வளர்க்க முன்வர வேண்டும். தனியே தனக்கு மட்டுமல்ல சமூகம் முழுவதற்கும் வளர்க்க முயலவேண்டும். அப்பொழுதுதான் சத்துவம் சமூகத்தில் தலையெடுக்கும். இது கீதையின் மகாமந்திரம்.

இதனையே மகாத்மா அறவாழ்வு (நம்பிக்கைப் பொறுப்பு, ஓம்படை) என்ற புதிய கருத்தில் கொணடுவந்தார் ஒருவரில் மிகையான இராசதகுணத்தின் பண்பும் பயனும் தாமசகுணமுடையார்க்குச் சென்று ஊற வேண்டும். சத்துவகுணத்தின் மிகையான பண்பும் பயனும் மற்றையவர்க்கு நன்மை பயக்க வேண்டும். அப்பொழுதுதான் சமூகம் முன்னேறும். இந்தக் கருத்தினை நாம் பொருளாதார முறையில் சிந்தித்துப் பார்ப்போம்.

மகாத்மாவின் கிராம ராச்சியக் கருத்தோடு வேண்டிய இடத்தில் பாரிய கைத்தொழிலிற்கும் இடமுண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. புதிய தொழினுட்பம், விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கம் ஆகியவற்றால் சில துறைகளில் பாரிய கைத்தொழில்களுக்கு இடம் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு உண்டாகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் என்ன செய்வது?

விஞ்ஞான வளர்ச்சியும் தொழினுட்பமும் நுண்மதியுடையாராலும், நிருவாகத் திறமையாளராலுமே கட்டிக் காக்கப்படக்கூடியவை. உதாரணமாக உலகத்து நல்நீர் வளமும் எரிவளமும் குறைந்து போனால் என்ன செய்வது? சூரிய ஒளியிலிருந்து சக்தியையும், கடலிலிருந்து நன்னீரையும் பெற்றாக வேண்டுமென்றால் விஞ்ஞானிகளும் அரசு அதிகாரிகளும் மட்டுமே (முதலாளிகள் மட்டுமே — செல்வர் மட்டுமே) சுகம் பெற முடியும். ஏழைகள் திறமையற்றோர் என்ன செய்வார்கள்? இதற்காகத்தான், உற்பத்தியாளரும், உத்தியோகரும் நம்பிக்கைப் பொறுப்புடையவராய் அறங்காவலராய் வாழவேண்டுமென்று மகாத்மா கூறினார்.

## அச்சுத் தொழில் பயிற்சி

உருத்திரபுரம், காந்தி நிலையத்தில் அச்சுத்தொழிலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப் பயிற்சியில் சேர விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

கௌரவ நிர்வாகி,
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.

---

கண்ணன் காட்டிய வழியான கீதையிலே மனித இயல்பின் ஏற்றத்தாழ்வை முன்னர்க் கூறினோம். மகாத்மா அதை ஏற்றுக்கொண்டே அற ஒழுக்கத்தைச் சமூக நியதியிலே புகுத்த முனைந்தார். பொதுவுடைமை வாதத்தில் 'தர்மம்' என்ற பேச்சிற்கே இடமில்லை. பொருளாதார உற்பத்தி, வினியோகம் இரண்டையும் விஞ்ஞான மயமாக்கிவிட்டால் எல்லாம் இன்பமாக முடியும் என்று கருதினார்கள் சிலர். ஆனால் 'அறம்' என்பதும் ஓர் சமூக ஒழுக்க விஞ்ஞான முடிபேயாகும். அது தனியே பொருளாதார அரசியல் உறவுகளோடு நிற்கவில்லை. மனிதர் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவு, ஆத்மார்த்த இயல்பு எல்லாவற்றையும் பொருள், அரசு ஆகியவற்றோடு சேர்த்து ஆராய்ந்து எடுத்த முடிபே 'அறவாழ்வு' என்னும் கருத்திற்கு வித்திட்டது.

பொருளாதார நிலை, இயல் அறிந்து, மூலதனத்தை உரிய நேரத்தில் அமைத்து, உவந்த இடத்தில் கைத் தொழில் நிறுவிச் சிக்கனமாகத் தொழில் நடாத்த எல்லாராலும் முடி யுமா? ஒரு சிலராலேயே முடியும். எனவே மற்றையவர் தாழ்ந்திருப்பதா அதற்காகத்தான் அறங்காவல் அமைப் சமூகத்திற்கு அத்தியாவசியமாகின்றது அறங்காவல் ஒழுக்கம் தனியே சட பொருள்களின் விஞ்ஞானமன்று. மனி னின் உடல், உளம் இரண்டும் கலந் நிலையின் விஞ்ஞான முடிபு.

— இ. இ

---

* சர்வோதய நற் சமுதாயத்தினை

# கிராம சுயராஜ்ய இயக்க ஊழியர்கள் பயிற்சி முகாம்

கிளிநொச்சி — உருத்திரபுரம், காந்தி நிலையத்தில் மகாத்மாகாந்தி அடிகளின் 109 ஆவது பிறந்த தின விழாவை முன்னிட்டு 1978 ஒக்ரோபர் 02 ஆம் திகதி தொடக்கம் 07 ஆம் திகதி வரை ஆறு நாட்கள் நடைபெற்ற கிராம சுயராஜ்ய இயக்க ஊழியர்களின் பயிற்சி முகாம்-எதிர்பார்த்த அளவிற்குமேல் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியது.

முதற்கட்டமாக ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் ஒவ்வொரு கிராமத்தைத் தெரிவுசெய்து கிராம சுயராஜ்ய —முழுமைப் புரட்சி இலட்சியத்திற்கு உழைப்பதென அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் தீர்மானத்திற்கமைய, சம்மாந்துறைதொகுதி — மல்வத்தை, பட்டிருப்பு தொகுதி — மகிளூர், மட்டக்களப்பு தொகுதி - கிரான்குளம், கல்குடா தொகுதி -மயிலந்தனை, சேருவிலை தொகுதி - பன்குளம், முல்லைத்தீவு தொகுதி - முள்ளியவளை, செம்மலை, கிளிநொச்சித்தொகுதி - சிவபுரம், மன்னூர் தொகுதி -முள்ளிக்குளம், காங்கேசன்துறைத் தொகுதி - அளவெட்டி, இளவாலை, மாதகல், உடுப்பிட்டி தொகுதி - கரணவாய் ஆகிய கிராமங்களிலிருந்து நாற்பது ஊழியர் சமுகமளித்திருந்தனர்.

முதலாம் நாள், காந்திநிலையம் கௌரவ நிர்வாகி திரு. சி. க. வேலாயுதபிள்ளை ஊழியர்களை வரவேற்று ஆசி கூறினர். இதனை அடுத்து பயிற்சிமுகாம் அமைப்பாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை 'கிராம சுயராஜ்யமும் முழுமைப்புரட்சியும்' என்னும் விடயம் பற்றிக் கருத்துரை வழங்கினர். மாலை காந்தி ஜயந்தி விழாவும் சர்வதேச சிறுவர் தினவிழாவும் சிறப்பாக நடைபெற்றன.

வைபவரீதியான தொடக்கவிழாவாக இரண்டாம்நாள் அமைந்தது. யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜகநாதன் திருவிளக்கேற்றி முகாமை வைபவரீதியாகத் தொடக்கி வைத்தார். பேராசிரிர் கு. நேசையா, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க. சுப்பிரமணியம், அகில இலங்கை காந்தி சேவா சங்க தலைவர் திரு. இ. கந்தையா ஆகியோர் கருத்துரை வழங்கினர்கள்.

மாலை நிகழ்ச்சியில், விசேட திட்ட முகாமையாளர் திரு. ச. கிருஷ்ண பிள்ளை, மேலதிக மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. க. வரதராஜன் ஆகியோர் கிராம உணவு சுயதேவைப் பூர்த்தி பற்றி கருத்துரை வழங்கினர்கள். இதனை அடுத்து யோகாசன போதனாசிரியர் திரு. த. சுப்பிரமணியம் யோகாசனம் பற்றி சாதனை-போதனை மூலம் விளக்கினர்.

மூன்றும் நாள், சுயதேவைப்பூர்த்தி-உடை என்பது பற்றி திரு.தேவேந்திரம் அவர்களும், சுயதேவைப் பூர்த்தி - வீடு என்பதுபற்றி பட்டயம் பெற்ற கட்டடக் கலைஞர் திரு. எஸ். ஏ. டேவிட் அவர்களும் 'இந்தியாவில் காந்தி ஆசிரமங்கள்' என்னும் விஷயம் பற்றி திரு. த. விஞயகம் அவர்களும் கருத்துரை வழங்கினர்கள்.

நான்காம் நாள், 'கிராம முன்னேற்றத்தில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு' என்னும் விஷயம் பற்றி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பொ. கமல நாதன் அவர்களும், 'சிந்தனையின் மாற்றம்' என்னும் விஷயம் பற்றி இலங்கைப் பல்கலைக் கழக – யாழ். வளாக விரிவுரையாளர் திரு. க. சச்சிதானந்தன் அவர்களும், 'இசைபடவாழ்தல்' என்னும் விஷயம் பற்றி இளைப்பாறிய தொழில் ஆணையாளர் திரு ச. இராசையா அவர்களும், 'புள்ளி விபரங்கள் தயாரித்தல்' என்னும் விஷயம் பற்றி திரு. ச. அ. டேவிட் அவர்களும் கருத்துரை வழங்கினர்கள்.

ஐந்தாம் நாள், கிளிநொச்சி பாராளு மன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் 'இளைஞர்களும் கிராமப் பணிகளும்' என்னும் விஷயம் பற்றிக் கருத்துரை வழங்கினர். இதனை அடுத்து, திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் 'பனம்பொருள் அபிவிருத்தி' பற்றி உரை நிகழ்த்தினர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலட்சியவாதி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியை அறிவுறுத்தி அவர்களாகவே நாட்டை விட்டுப்போக வைக்கவேண்டும். அவர்களோ சர்வவல்லமை படைத்தவர்கள். நினைத்தால் ஒரு நொடிப் பொழுதில் இந்தியாவைப் பொசுக்க வல்ல ஆயுதங்களைப் படைத்திருந்தனர். எனவேதான் அவர்கட்குப் புதுமையான, அகிம்சா பூர்வமான ஆயுதத்தை நமக்களித்து அதைப் பயன்படுத்துவதில் மக்களுக்குப் பயிற்சி கொடுத்து இருவருக்கும் பாதகமில்லாது செல்ல வழி வகுத்தார்.

### நிர்மாணகர்த்தா

காந்தி திட்டமிடுவதில் ஒரு சமர்த்தர். அடித்தளத்தில் உழல்பவரைக் கைதூக்கிவிடுவதில் வல்லவர். பொது நலனில் தனி மனித நலம் அடங்கியுள்ளது என்று கண்டவர். வெறும் அரசியல் விடுதலை நன்மை பயக்காது என்பதை உணர்ந்தவர் காந்தி. சமுதாய ஊழல்கட்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பொருளாதார மேம்பாடு அனைவருக்கும் கைகூட வேண்டும். இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு நிர்மாணத்திட்டங்களை வகுத்தார்.

### ஜனநாயக மரபு

காந்தி முழுக்க முழுக்க ஒரு ஜனநாயகவாதி. தனி மனிதன் உயர்ந்தாலன்றி ஜனநாயகம் தழைக்காது என்பதை அவர் நன்கு அறிவார். எனவே தான் ஏகாதச விரதங்களை முதலில் தனது ஆசிரம வாசிகட்கும் பின் விடுதலை வேட்கையாளர்களுக்கும் இன்றியமையாதவை யாக்கினர். அகிம்சை, சத்தியம், திருடாமை, பிரமச்சரியம், வெளவாமை, நாவடக்கம், அஞ்சாமை, சமயங்களில் சமத்துவம், சுவதேசி, தீண்டாமை அகற்றல் ஆகிய கருத்துக்கள் படிப்படியே பரவலாயின. இவைகளை அனைவரும் அலுப்பு சலிப்பின்றி எடுத்தோதி நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். அப்போது குறுகிய நாட்டுப்பற்று ஒழியும்; தர்மகர்த்தா முறை ஓங்கும்; சுரண்டல் மறையும்; இயற்கை வாழ்வு ஒளிரும்; உடலுழைப்பு உயர்வுறும்; அண்டை அயலானை நேசிக்கும் எண்ணம் உதயமாகும்; அஞ்சாமை எஞ்சும்; தீண்டாமை அகலும்.

காந்தியைப் போற்றுவோம்.
சாந்தியைப் பெறுவோம்.

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய சுயராஜ்ய இயக்க ஊழியர்கள் பயிற்சி முகாமில் பங்குபற்றியவர்கள்

**சம்மாந்துறை தொகுதி**

**மல்வத்தை**

திரு. க. உருத்திரன்
,, க. தங்கராசா
,, நா. பழனித்தம்பி
,, பொ. பொடிமாத்தையா

**பட்டிருப்பு தொகுதி**

**மகிளூர்**

திரு. க. தியாகராசா
,, செ. இராச நாயகம்
,, க. சிவராசா
,, சா. ஏகாம்பரம்
,, தெ. சோதிலிங்கம்

**குருக்கள்மடம்**

திரு. மா. தயாபரன்

**மட்டக்களப்பு தொகுதி**

**கிரான் குளம்**

திரு. நா. விஸ்வலிங்கம்
,, க. தேவதாசன்
,, கு. வர்ணகுலசிங்கம்
,, தா. சாமித்தம்பி
,, மா. அழகுதுரை

**கல்குடா தொகுதி**

**மயிலந்தனை**

திரு. க. சைமன் சிங்கோ
,, செ. இராசையா
,, இ. வேதநாதன்
,, இ. அப்பசுந்தரம்
,, ச. கணபதிப்பிள்ளை

**சேருவில தொகுதி**

**பன்குளம்**

திரு ஆ. ஆனந்தராஜா
,, ச. மகேந்திரன்
,, க. முத்துக்கிருஷ்ணன்

**முல்லைத்தீவு தொகுதி**

**முள்ளியவளை**

திரு. கே. ரி. மதுபாலசிங்கம்
,, கு. செல்வக்குமாரன்
,, வ. இராசரத்தினம்

**செம்மலை**

திரு. க. புஷ்பானந்தன்
,, ஆ. பாலையா

**மன்னார் தொகுதி**

**முள்ளிக்குளம்**

திரு ப. சகாயநாதன்குரூஸ்
,, பி. கிறிஸ்ரிகுரூஸ்
,, பி. கிறகோரிகுரூஸ்
,, செ. அந்தோனிதாசன்

**பெனாண்டோ**

,, யா. சூசையப்பு ரவ்வல்

**கிளிநொச்சி தொகுதி — சிவபுரம்**

திரு. ஆ. க. சுப்பிரமணியம்
,, க. பரமானந்தம்

**உருத்திரபுரம்**

திரு. மு. பத்மநாதன்

**காங்கேசன்துறை தொகுதி**

**அளவெட்டி**

திரு. கா. குணாளன்

**இளவாலை**

திரு. பி. கி. மே. யோசவ்

**மாதகல்**

திரு. செ. சீதரன்

**உடுப்பிட்டி தொகுதி — கரணவாய்**

திரு. க. சின்னையா

**கொழும்பு**

செல்வன். த. நந்திவர்மன்

## கிராம சுயராஜ்ய....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

மாலை நிகழ்ச்சியாக லோங் நிறுவனம், குருகுலம் ஆகியவைகளை ஊழியர் பார்வையிட்டனர்.

ஆறாம் நாள் காலை அக்கராயன் குளத்தில், காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்தமாக, காந்திசேவா சங்க ஆதரவில் அமைக்கப்பட்டுள்ள காந்திக் கிராமத்தை ஊழியர் பார்வையிட்டனர்.

நண்பகல் காந்தி நிலயத்தில் பிரியாவிடை வைபவத்துடன் பயிற்சிமுகாம் நிறைவெய்தியது.

இம்முயற்சி காந்தி சேவா சங்கத்திற்கு புதிய அனுபவத்தையும் ஆற்றலையும் அளித்துள்ளது. ஊழியர் ஒவ்வொருவரும் தத்தம் கிராமங்களுக்குச் சென்று கிராம சுயராஜ்யத்திற்காக உழைக்க வேண்டுமென உறுதி பூண்டு சென்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

# அன்பர் தபால்

இங்கிலாந்திலிருந்து காந்தி நிலைய மாணவர்களுக்கு ஒரு சகோதரி பின்வருமாறு எழுதுகிறார்.

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் (B.B.C.) ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட சில மாதங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் பதினைந்து நிமிடத்திற்கு, அறிஞர்கள் தங்கள் அனுபவங்களை 'அனுபவங்களின் ஒளி' (LIGHT OF EXPERIENCE) என்ற தலைப்பிற் கூறுவதற்கு நிகழ்ச்சி நிரலில் ஒழுங்கு செய்துள்ளார்கள். சென்ற ஆண்டு தொலைக்காட்சிச் சேவையில் கிறீஸ்தவப் பாதிரியார் ஒருவர் தனது அனுபவங்களைக் கூறும்போது, எளிமை, அன்பு, சேவை, ஆகியவற்றிற்கு முதலிடம் கொடுத்த அண்ணல் மகாத்மா தனக்கு வழிகாட்டிய பெரியார்களுள் முதன்மையானவரென மனம் நெகிழ்ந்து கூறியது இன்றும் என் மனத்துள் பசுமையாக இருக்கிறது.

உள்ளத்தாற் பொய்யாதொழு-
கின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

என்ற குறளிற்கு இலக்கணமாக உள்ளவர் எங்கள் 'பாபுஜீ' என்று பலரும் கூறியதை நினைவூட்டிய மனம், நெகிழ்ந்து உருகியது.

காந்தி நிலயத்தில்— காந்திய அன்பர்களின் அன்பிலும் ஆதரவிலும் வாழும் உங்களுக்கு நான் புதிதாக எதையும் கூறவேண்டிய அவசியமில்லை. உயர்ந்த படிப்பு — உயர் பதவி — பணம் ஆகியவற்றின் துணையின்றி சேவை, அன்பு, எளிமை, உறுதியான உள்ளம் ஆகியவைகளின் துணை கொண்டு தனக்கும் பிறர்க்கும் பயன்படக்கூடிய பெருவாழ்வு வாழ முடியும் என்ற நம்பிக்கை ஒளியை ஆயிரம்-ஆயிரம் உள்ளங்களில் ஏற்றி வைத்தவர் 'எங்கள் அண்ணல்' மகாத்மா. அந்த நம்பிக்கை ஒளி எங்கள் அனைவரின் உள்ளங்களிலும் சுடர்விட்டு ஒளிரப் பிரார்த்திப்போம்.

(மாதந்தோறும் காந்திநிலயத்திற்கு சம்பத்துத் தானத்தை அனுப்பிவரும் இச்சகோதரி தமது பெயரை வெளியிட விரும்பவில்லை.

ஆ-ர்)

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org